1975 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆறு உறுப்பினர்கள் மட்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, இந்த கண்ட்ரோல் முறையில் ரிஜிஸ்ட்டர் செய்து கார் வாங்கியவர்களில் எவ்வளவு பேர் காரை விற்றிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இரண்டு பேர்களுடைய கார் பழுது ட்டு, அவற்றை விற்பதற்கு அனுமதி வாங்கியிருக்கிறார்கள்.

Power Connection for Street Lights in Harijan Colony

* 40 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government are aware that even though the street lights have been provided in the Harijan Colony at Kottathur in Musiri Panchayat Union, Tiruchirappalli District, power connection has not yet been given; and

(*b*) if so, the reason therefor?

அரிசனக் குடியிருப்புத் தெரு மின் விளக்குகளுக்கு மின் வசதி வழங்குதல்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளிமாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டத்தூர் கிராமத்திலுள்ள அரிசனக் குடியிருப்பில், தெரு மின் விளக்குகள் போடப்பட்டும், மின்சாரம் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) ஆம்.

(இ) கோட்டத்தூர் கிராமத்தின் அரிசனக் குடியிருப்பு உட்பட அந்தக் கிராமத்திற்கு மின் வசதியளிப்பதற்கான செயற்குறிப்பு ஏற்பளிக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளது என மின் வாரியம் கூறியுள்ளது. மின் கடத்திகள் (conductors) போதுமான அளவில் கிடைக்கப் பெறாமையின் காரணமாக மேற்படி வேலைத் திட்டம் முற்றுப்பெறவில்லை. மேற்படி மின் கடத்திகள் கிடைக்கப்பெற்றவுடன் மேற்படி வேலைத் திட்டம் விரைவில் மேற்கொள்ளப் படும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அரிசனக் காலனிகளுக்கு, பின்தங்கியவர்களுக்கு முதலில் மின்வசதி கொடுக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த முசிறி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோட்டத்தூர் கிராமத்தில் உள்ள பள்ளர்கள் குடியிருப்பு, சக்கிலியர் குடியிருப்புக் காலனி, முத்துராஜ கோட்டம் ஆகிய மூன்று இடங்களுக்கு கிட்டத்தட்ட மூன்று வருடங்களாக மின் இணைப்பு கொடுக்கவில்லை. என்ன காரணத்தினால் அரசு இவற்றுக்கு மின் இணைப்பு கொடுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : இதைப்பற்றித்தான் செயற் குறிப்பிலே இருந்ததைச் சொன்னேன். போதுமான மின் கடத்திகள் இல்லாத காரணத்தினால், காலதாமதம் ஏற்படுகிறது. மின்சாரக் கம்பங்கள் அங்கு கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டுவிட்டன. மின் கடத்திகள் இல்லாத காரணத்தால், மின்சார இணைப்பு கொடுக்கவில்லை. முதலில் அரிசனக் காலனி களுக்கு மின்சாரம் கொடுத்துவிட்டுத்தான், கிராமங்களுக்குப் போக வேண்டு மென்பது அரசினுடைய கொள்கை. மேலும், அது அங்குள்ள தலைவர் களுடைய ஜாதி மத இன வேறுபாடு பார்க்காத நல்ல மனத்தைப் பொறுத் தது. இதற்கு மேலே என்னால் ஒன்றும் சொல்ல முடியாது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அமைச்சர் அவர்களின் கருத்தை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் ஜாதி மத இனத்தைப்பற்றி தலைவர்கள் மேல் குற்றம் சாட்டுவதாகத் தெரிகிறது. மூன்று ஆண்டு காலமாக அந்த ஊராட்சி ஒன்றியம் கொடுத்த தீர்மானத்தின் பேரிலும் வரவில்லை. அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : துணைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கு ஓரிடம், இரண்டு இடங்கள் இப்படி இருக்கின்றன. மின்சார வாரியத்திலே போதுமான மின் கடத்திகள் இல்லாததினால்தான் தாமதம் ஏற்படுகிறதென்ற விளக்கத்தினைக் குறிப்பிட்டேனே தவிர வேறு அல்ல.

திரு. வி. வெங்கா : இந்த அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் கடத்திகள் இல்லாததால் மூன்று ஆண்டுக் காலமாக மின் இணைப்பு கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அது எப்பொழுது கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : கிட்டத்தட்ட 28 ஆயிரம், 30 ஆயிரம் காலனிகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. நான் அறிந்தவரை இன்னும் 800 காலனிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும். அது இன்னும் இரண்டு மாதங்களில் பூர்த்தியாகிவிடும்.

1975 அக்டோபர் 28]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு மற்றும் தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, இனம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு இவைகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(2) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்:—

(1) 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1975).

(2) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975).

(3) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு மூன்றும் திருத்த) மற்றும் தமிழ் நாடு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 30/1975).

(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு இனம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 22/1975).